

விருதுநகர் மாவட்டம் , அருப்புக்கோட்டை தேவாங்கர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடைபெற்ற விழாவில் , 370 மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வழங்கினார் . உடன் நகர் மன்ற தலைவர் சுந்தரலட்சுமி சிவப்பிரகாசம், தி.மு.க. பொருளாளர் சாகுல் ஹமீது, ஒன்றிய தி.மு.க. செயலாளர் பாலகணேசன், இளைஞர் அணி பாபுஜி, நகரச் செயலாளர் ஏ.கே.மணி, நெசவாளர் அணி பழனிச்சாமி ஆகியோர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றத் பேரவை அரசு உறுதிமொழி குழுவின் தலைவர் த.வேல்முருகன் மற்றும் குழுவின் உறுப்பினர்களான இரா.அருள் , ஏ.நல்லதம்பி, எம்.கே.மோகன் .எஸ் ஜெயக்குமார் ஆகியோர் குன்னூர் அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு வகைகளின் தரத்தினை உட்கொண்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு உட்பட பலர் உள்ளனர்.

### புதுச்சேரி மாநில

# இளைஞர் அணி நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## அமைப்பாளர் இரா.சிவா பங்கேற்றார்!

*புதுச்சேரி, ஆக. 24 -*

*முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, 100 இளம் பேச்சாளர்களைக் தேர்வு செய்யும் பொருட்டு, தி.மு.க. தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கலைஞரின் "என் உயிரினும் மேலான"..! என்ற தலைப்பில் தொடங்கி என்றென்றும் பெரியார். ஏன்?. அண்ணா கண்ட மாநில சுயாட்சி, கலைஞரின் தொலைநோக்குப் பார்வை, கலைஞர், கலைஞர் - நவீன நாட்டின் சிற்பி, இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம், சமூக நீதிக் காவலர் கலைஞர், தமிழ்நாடு குடும்ப ங்களில் தி.மு.க., போன்ற பல் வேறு தலைப்புகளில் பேச்சுப் போட்டி நடத்திட அறிவுறுத்தப்பட்டது.*

*அதன் அடிப்படையில் புதுச்சேரி மாநில இளைஞர் அணி சார்பில் பேச்சுப் போட்டி நடத்துவது குறித்த அவசர ஆலோசனைக் கூட்டம் லப்போர்த் வீதியில் உள்ள திமுக தலைமை அலுவலகத்தில் நேற்று காலை 11.30 மணிக்கு நடந்தது.*

*கூட்டத்திற்கு மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ., தலைமை வகித்தார்.*

*மாநில கழக அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா கலந்து கொண்டு பேச்சுப் போட்டிகளை எப்படி நடத்துவது குறித்து ஆலோசனைகள் வழங்கினார்.*

*கூட்டத்தில், புதுச்சேரி மாநிலத்தில் 26-ஆம் தேதி திங்கள்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 4.00 மணிவரை புஸ்சி வீதியில் உள்ள ரோஷ்மா திருமண நிலையத்தில் நடத்துவது என்றும் இப்போட்டியில் புதுச்சேரியில் உள்ள கல்லூரிகளைச் சேர்ந்த 300 மாணவ, மாணவியர்கள் பங்கேற்க வைப்பது என்றும் இப்போட்டிக்கு தலைமைக் கழகத்தால் நிய மிக்கப்படும் நிர்வாகிகள் நடுவர்களாக இருந்து சிறப்பாக பேசும் மாணவர்களை தேர்வு செய்து தமிழ்நாடு அளவில் நடைபெறும் பேச்சுப் போட்டியில் பங்கேற்க செய்து அவர்கள் மாநில அளவில் வெற்றி பெற வைத்து புதுச்சேரிக்கு பெருமை சேர்க்க வைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.*

*கூட்டத்தில், மாநில மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.பி. மணிமாறன், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு. மோகன்தாசு, மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டாக்டர் நித்திஷ், முகிலன், ரெமிஎட்வின், உத்தமன், தாமரைக்கண்ணன், கிருபாசங்கர், அகிலன், தமிழ்பிரியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

---

### திருநெல்வேலி மத்திய மாவட்டம்

## திருநெல்வேலி மாநகரம், மேலப்பாளையம் பகுதி, 54வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

திருநெல்வேலி மத்திய மாவட்டம், மேலப்பாளையம் பகுதி, 54வது வட்டச் செயலாளர் கே.பி.ஜான்கென்னடி அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக **ஜி.வினோத் குமார்,** (12,அழகர் நகர், NGO-A காலனி, திருநெல்வேலி - 627007.)அவர்கள்54வதுவட்டக்கழகப்பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.08.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

### ஜம்மு - காஷ்மீர் - அரியானா மாநிலங்களில் சட்டப் பேரவைத் தேர்தல்!

# 400 பொதுப் பார்வையாளர்கள்!

## இந்திய தேர்தல் ஆணையம் நியமித்தது!

*புதுடெல்லி, ஆக. 24 -*

*சட்டப்பேரவை தேர்தல் நடக்க உள்ள ஜம்மு - காஷ்மீர் மற்றும் அரியானா மாநிலங்களுக்கு 400 பொதுப் பார்வையாளர்களை இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.*

*ஜம்மு - காஷ்மீரில் வரும் செப்டம்பர் 18 ஆம் தேதி தொடங்கி மூன்று கட்டங்களாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுகிறது. ஹரியானாவில் அக்டோபர் 1 ஆம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலுக்காக 400 பொதுப் பார்வையாளர்களை தலைமைத் தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.*

*இதுதொடர்பாக டெல்லியில் தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.*

*அப்போது பேசிய ராஜீவ் குமார், தகவல் பரிமாற்றத்தில் எந்த இடையூறும் ஏற்படாமல் பார்வையாளர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.*

*தேர்தல் நடைமுறைகளை சீர்குலைக்க முயற்சிக்கும் பொய் பரப்புரைகள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் தலைமை தேர்தல் ஆணையர் வலியுறுத்தியுள்ளார்.*

---

### பெரம்பலூர் மாவட்டம்

## வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்து வந்த வீ.ஜெகதீசன் அவர்கள், மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ந.ஜெகதீஸ்வரன்**, (1/5, இனாம் அகரம், திருவாளந்துறை அஞ்சல், வேப்பந்தட்டை தாலுகா, பெரம்பலூர் மாவட்டம் - 621117) அவர்கள் வேப்பந்தட்டை கிழக்குஒன்றியக்கழகப்பொறுப்பாளராகநியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.08.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

### தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

## திருப்பத்தூர் மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

### ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ, அறிவிப்பு

திருப்பத்தூர் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் தம்புராஜ் மறைவெய்திய காரணத்தால், ஜெ.ஞானவேல் (2/48, ஜெய்பீம் நகர், பாச்சல் & அஞ்சல், திருப்பத்தூர் மாவட்டம் - 635 602) அவர்கள் திருப்பத்தூர் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகளுடன் இணைந்து இவர், கழகப் பணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.08.2024

**ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.,**
செயலாளர்,
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

---



### வேலூர் மாவட்ட தி.மு.க.

## வேலூர் மாநகரம், பகுதி கழக வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டங்கள்!

### மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ அறிவிப்பு!

| அமைப்பு | நாள் மற்றும் நேரம் | நிகழ்விடம் |
|---|---|---|
| சலவன்பேட்டை பகுதி | 26.08.2024<br>மாலை 06.00 | பிரண்ட்ஸ் பார்கிங்,<br>PK ரங்கசாமி தெரு,<br>சூளைமேடு அருகில், வேலூர் |
| சங்கரன்பாளையம் பகுதி | 26.08.2024<br>இரவு 07.00 | பேபி ரெஸ்டாரண்ட்,<br>லக்ஷ்மி தியேட்டர் அருகில், வேலூர் |
| சைதாப்பேட்டை பகுதி | 27.08.2024<br>முற்பகல் 11.00 | சாந்தி மஹால் A/C<br>GRT ஹோட்டல் அருகில்,<br>கிரீன்சர்கிள், வேலூர் |
| வேலப்பாடி பகுதி | 27.08.2024<br>நண்பகல் 12.00 | சுசீலா மஹால்,<br>தினகரன் தியேட்டர் அருகில்,<br>வேலப்பாடி, வேலூர் |
| சத்துவாச்சாரி வடக்கு பகுதி | 27.08.2024<br>மாலை 06.00 | ஸ்ரீ பாலாஜி மஹால்,<br>டபுள் ரோடு, வள்ளலார்,<br>சத்துவாச்சாரி, வேலூர் |
| சத்துவாச்சாரி தெற்கு பகுதி | 27.08.2024<br>இரவு 07.00 | எஸ்.பி.கௌரி மஹால்,<br>பேஸ்1, வள்ளலார்,<br>சத்துவாச்சாரி, வேலூர் |
| தொரப்பாடி பகுதி | 28.08.2024<br>காலை 10.00 | கே.எஸ்.எம்.மஹால்,<br>பாண்டியன் கெஸ்ட் ஹவுஸ் அருகில்,<br>அரியூர், வேலூர் |
| கஸ்பா பகுதி | 31.08.2024<br>காலை 10.00 | மா.பா.சாரதி சமுதாய கூடம்,<br>கஸ்பா, வேலூர் |

மேற்படி நிகழ்ச்சி நிரலின்படி நடைபெற உள்ள பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் அந்தந்த அமைப்பிற்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர செயலாளர் மற்றும் நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக்கழக நிர்வாகிகள், மாநில, மாவட்ட, மாநகர, பகுதி கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள், கழக முன்னாள், இந்நாள் முன்னோடிகள் ஆகியோர்கள் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.**
செயலாளர்
வேலூர் மாவட்ட தி.மு.க.


